செய்தி வெளியீடு எண்: [illegible]/2018 நாள்: 23.04.2018

**வேலூர் மாவட்டத்தில் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தேவைப்படும் குழந்தைகளுக்கு சைல்டுலைன் என்ற திட்டத்தில் 1098 என்ற இலவச அலைபேசி அழைப்பு எண் அறிமுகம்!**

**வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது!!**

வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலுள்ள காயிதே மில்லத் அரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நிலப்பட்டா, புதிய குடும்ப அட்டை, பட்டாமாறுதல், வேலைவாய்ப்பு, கடனுதவி, நிதியுதவி, இலவச வீட்டுமனைப்பட்டா, முதியோர் உதவித் தொகை, காவல்துறை பாதுகாப்பு, மின் இணைப்பு மற்றும் பொதுநல மனுக்கள் என **320** மனுக்களை வழங்கினர். இம்மனுக்களை பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார்.

இக்குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், வேலூர் மாவட்டத்தில் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தேவைப்படும் குழந்தைகளுக்கு சைல்டுலை 1098 இலவச அலைபேசி அழைப்பு எண் என்ற திட்டத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார். இவ்வெண்ணிற்கு காணாமல் போன குழந்தைகள், கொடுமைக்கு இறையாகும் குழந்தைகள், வீட்டிலிருந்து ஓடிப்போன குழந்தைகள், மருத்துவ உதவி தேவைப்படும் குழந்தைகள், ஆதரவற்ற, தெருவோர, மாற்றுதிறனாளி, பிச்சை எடுக்கும் குழந்தைகள், குழந்தைத் தொழிலாளர்கள், மனரீதியாக மற்றும் உடல்ரீதியாக பாதிக்கப்பட்ட குழந்தைகள், குழந்தை திருமணங்கள், திருநங்கை, எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகள், பள்ளி இடைநின்ற குழந்தைகள் போன்ற பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தேவைப்படுகின்ற மற்றும் துன்பத்தில் தவிக்கும் குழந்தைகளின் தகவல்களை 1098 என்ற இலவச அழைப்பு எண்ணில் தகவல்களை தெரிவித்து அக்குழந்தைகளின் பாதுகாப்பிற்காக பொதுமக்கள் உதவிடலாம். மேலும் இக்கூட்டததில் 1098 இலவச அழைப்பு எண் குறித்த விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் விநியோகித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மரு.தா.செங்கோட்டையன், மாவட்ட ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலர் திரு.கஜேந்திரன், துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் துறை) திருமதி.பேபிஇந்திரா, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் திருமதி.நிஷாந்தினி, 1098 இயக்குநர் திரு.சுவாமிநாதன் மற்றும் அனைத்து அரசு துறை அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.

வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
வேலூர்-9.